# கூட்டுறவுச் சங்கங்களுக்கான முதல்நிலைத் தேர்தல் முடிவடைந்தது

## 20,638 சங்கங்களில்

## 1,98,502 நிர்வாகக் குழு உறுப்பினர்கள் தேர்வு

## மாநிலத் தேர்தல் ஆணையர் அறிவிப்பு

தமிழகத்தில் கூட்டுறவுச் சங்கங்களுக்கான முதல்நிலை தேர்தலில் நிர்வாகக்குழு உறுப்பினர்கள் தேர்தல் நிறைவடைந்தது என்றும், தேர்தல் நடைபெற்ற **20,638** சங்கங்களில் **1,98,502** நிர்வாகக்குழு உறுப்பினர்கள் தேர்வு பெற்றுள்ளனர் என்றும் கூட்டுறவுச் சங்கங்களுக்கான தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையர் திரு. ம.ரா.மோகன்,இ.ஆ.ப., (ஓய்வு) தெரிவித்துள்ளார். இது சம்மந்தமாக அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு வருமாறு :-

### ஐந்து நிலைகளில் தேர்தல்

தமிழகத்தில் உள்ள 22,532 கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஐந்து நிலைகளில் தேர்தல் நடைபெறும் என்றும், முதல் நிலையில் வரும் 22,192 சங்கங்களுக்கான தேர்தல் நான்கு கட்டங்களாக நடைபெறும் என்றும் கூட்டுறவுச் சங்கங்களுக்கான மாநிலத் தேர்தல் ஆணையம் கடந்த 4.03.2013 அன்று தேர்தல் அறிவிப்பை வெளியிட்டிருந்தது. இந்த நான்கு கட்ட தேர்தல்களுக்கான தேர்தல் அட்டவணையையும் ஆணையம் அப்போது வெளியிட்டிருந்தது. பின்னர் மேலும் 20 கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல் அட்டவணையையும் தேர்தல் ஆணையம் வெளியிட்டிருந்தது. ஆக மொத்தம் 22,212 கூட்டுறவுச் சங்கங்கள் தேர்தல் நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டன. இவற்றுள் 19,115 சங்கங்களில் போட்டியின்றியும், 1,523 சங்கங்களில் போட்டி ஏற்பட்டதால் தேர்தல் நடத்தியும் நிர்வாகக்குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். 1,574 சங்கங்களில் ஒரு வேட்புமனு கூட பெறப்படாததால் இச்சங்கங்களில் தேர்தல் நடைபெறவில்லை. இவை பெரும்பாலும் செயல் இழந்துள்ள சங்கங்களே ஆகும்.

### நான்காவது கட்டத்தேர்தல்

இந்த நான்கு கட்டத்தேர்தலில் நான்காவது கட்டத் தேர்தலுக்கான வாக்குப்பதிவு கடந்த 27.04.2013 அன்று நடைபெற்றது. வாக்கு எண்ணிக்கை கடந்த 30.04.2013 அன்று நடைபெற்று முடிவுகள் அறிவிக்கப்பட்டன. நான்காவது கட்டத்தேர்தலில் 461 சங்கங்களில் வாக்கு எண்ணிக்கை முடிவு பெற்று 4,057 நிர்வாகக்குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இவர்களுள் 532 பேர் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இட ஒதுக்கீட்டின் கீழும், 810 பேர் பெண்களுக்கான இட ஒதுக்கீட்டின் கீழும், 2,715பேர் பொதுப்பிரிவின் கீழும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். ஏற்கெனவே நான்காவது கட்டத் தேர்தலில் 5,120 சங்கங்களில் 49,568 நிர்வாகக்குழு உறுப்பினர்கள் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஓட்டு மொத்த முடிவு

முதல் நிலையில் தேர்தல் நடைபெற்று முடிந்துள்ள 20,638 சங்கங்களில் மொத்தம் 1,98,502 நிர்வாகக்குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இவர்களுள் 1,85,193 பேர் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டனர். 13,309 பேர் தேர்தலில் நின்று தேர்ந்தெடுக்கப்பட்டனர். மொத்தம் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக்குழு உறுப்பினர்களில் 28,095 பேர் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இட ஒதுக்கீட்டின் கீழும், 55211 பேர் பெண்களுக்கான இட ஒதுக்கீட்டின் கீழும், 1,15,196 பேர் பொதுப்பிரிவின் கீழும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

## தலைவர் / துணைத்தலைவர் தேர்தல்

இதுவரை மூன்று கட்டங்களின் கீழ் வரும் 14,975 சங்கங்களில் தலைவர் / துணைத்தலைவர் தேர்தல் நடைபெற்று முடிந்துள்ளது. மொத்தம் 14933 பேர் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். 14,917 பேர் துணைத்தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளவர்களில் 923 பேர் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இட ஒதுக்கீட்டின் கீழும், 1,887 பேர் பெண்களுக்கான இட ஒதுக்கீட்டின் கீழும், 12,123 பேர் பொதுப்பிரிவின் கீழும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இதே போல துணைத்தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளவர்களில் 1,275 பேர் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இடஒதுக்கீட்டின் கீழும், 2,840 பேர் பெண்களுக்கான இட ஒதுக்கீட்டின் கீழும், 10,802 பேர் பொதுப்பிரிவின் கீழும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இன்னமும் 42 சங்கங்களில் தலைவர் பதவியும், 58 சங்கங்களில் துணைத்தலைவர் பதவியும் தேர்ந்தெடுக்கப்படாமல் காலியாக உள்ளன. இந்த காலிப்பணியிடங்களை நிரப்புவதற்கு விரைவில் தேர்தல் நடத்த தேர்தல் ஆணையம் திட்டமிட்டுள்ளது. நான்காவது கட்டத்தில் தேர்தல் நடைபெற்ற 5,581 சங்கங்களில் தலைவர் / துணைத்தலைவரை தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் 6.5.2013 அன்று நடைபெறுகிறது.

## மே 9ல் பதவி ஏற்பு

நான்கு கட்டங்களாக தேர்தல் நடைபெற்று முடிந்துள்ள 20,638 கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள் / துணைத்தலைவர்கள் மே'9 வியாழனன்று பதவி ஏற்க உள்ளார்கள். அதன்பின்னர் அவர்கள் தங்கள் சங்கத்தின் நிர்வாகக் குழு கூட்டத்தைக் கூட்டி இரண்டாவது நிலையில் தேர்தல் நடைபெறும் கூட்டுறவுச் சங்கங்களுக்கான பிரதிநிதிகளை தேர்ந்தெடுத்து அனுப்புவார்கள்.

## இரண்டாம் நிலைத் தேர்தல்

இரண்டாம் நிலையில் 198 சங்கங்களுக்கு தேர்தல் நடைபெறவுள்ளது. இதற்கான அறிவிப்பும், தேர்தல் அட்டவணையும் விரைவில் வெளியிடப்படும்.

மேற்கண்டவாறு கூட்டுறவுச் சங்கங்களுக்கான மாநில தேர்தல் ஆணையர் திரு. ம.ரா. மோகன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

6.5.13

ஆணையர்

# கூட்டுறவுச் சங்கங்களுக்கான முதல்நிலைத் தேர்தல் நிர்வாகக் குழு உறுப்பினர்கள் தேர்வு

| வ. எண் | மாநிலத் தேர்தல் அலுவலர் | தேர்தல் நடவடிக்கைக்கு உட்படுத்தப் பட்ட சங்கங்கள் | வேட்பு மனு பெறப்படாததால் நிர்வாகக் குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப் படாத சங்கங்கள் | நிர்வாகக் குழு உறுப்பினர் களை போட்டியின்றி தேர்ந்தெடுத்த சங்கங்கள் | போட்டி ஏற்பட்டதால் தேர்தல் நடைபெற்ற சங்கங்கள் | மொத்தம் | தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நிர்வாகக் குழு உறுப்பினர்களில் | | | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இட ஒதுக்கீட்டில் தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள் | பெண்களுக் கான இட ஒதுக்கீட்டில் தேர்ந்தெடுக்க ப்பட்டவர்கள் | பொதுப் பிரிவில் தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள் | |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | | | (9) |
| 1. | கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் | 7190 | 72 | 6070 | 1048 | 7190 | 13482 | 19986 | 41515 | 74983 |
| 2. | தொழில் மற்றும் வணிகத்துறை ஆணையர் | 312 | 19 | 280 | 13 | 312 | 306 | 578 | 1413 | 2297 |
| 3. | மீன் வளத்துறை ஆணையர் | 1389 | 23 | 1197 | 169 | 1389 | 347 | 1298 | 7830 | 9475 |
| 4. | கதர் கிராமத் தொழில் வாரிய முதன்மை செயல் அலுவலர் | 158 | 2 | 152 | 4 | 158 | 127 | 310 | 648 | 1085 |
| 5. | கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் | 1345 | 23 | 1276 | 46 | 1345 | 291 | 2644 | 5774 | 8709 |
| 6. | பால்வளத்துறை ஆணையர் | 9834 | 1413 | 8255 | 166 | 9834 | 11011 | 25423 | 48904 | 85338 |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7. | பதிவாளர் (வீட்டுவசதி) | 860 | 18 | 819 | 23 | 860 | 1635 | 2466 | 5017 | 9118 |
| 8. | பனைவெல்ல அபிவிருத்தி வாரிய முதன்மை செயல் அலுவலர் | 731 | - | 726 | 5 | 731 | 529 | 1395 | 3061 | 4985 |
| 9. | கால்நடை பராமரிப்புத்துறை ஆணையர் | 107 | 3 | 103 | 1 | 107 | 103 | 206 | 412 | 721 |
| 10. | சமூக நலத்துறை ஆணையர் | 97 | - | 89 | 8 | 97 | 96 | 582 | - | 678 |
| 11. | ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் ஆணையர் | 26 | 1 | 25 | - | 26 | 25 | 50 | 100 | 175 |
| 12. | பட்டுப்பூச்சி வளர்ச்சித்துறை இயக்குநர் | 25 | - | 23 | 2 | 25 | 45 | 73 | 121 | 239 |
| 13. | வேளாண்மைத் துறை இயக்குநர் | 93 | - | 92 | 1 | 93 | 93 | 186 | 368 | 647 |
| 14. | ஊரக வளர்ச்சித்துறை இயக்குநர் | 45 | - | 8 | 37 | 45 | 5 | 14 | 33 | 52 |
| | **கூடுதல்** | **22212** | **1574** | **19115** | **1523** | **22212** | **28095** | **55211** | **115196** | **198502** |

ஆணையர் 6.5.13